

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சிகள் இயக்குநரகம், பேரூராட்சிகள் இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றில் பணியின்போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 451 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (04.08.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பெருநகர சென்னை மாநகராட்சியில் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை 223 நபர்களுக்கு ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக் குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

13 - ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் : பெரி.குமார், மேலத்தெரு, கொத்தமங்களம் அஞ்சல் -630105, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். கு.முருகன், அச்சங்குளம், திருப்புவனம் வட்டம், சிவகங்கை மாவட்டம். பெரி.முருகன், மாங்குடி. திருப்பத்தூர் வட்டம் சிவகங்கை மாவட்டம் -630210. சா.துரைராஜ், கே.புதுபட்டி, தர்மபட்டி அஞ்சல் -630309. சிங்கம்புணரி வட்டம், சிவகங்கை மாவட்டம். ஆ.அசோக், கண்டதேவி அஞ்சல், தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

தலைவர் : கா.பாலகிருஷ்ணன், சோழந்தூர் அஞ்சல், பொட்டகவயல், இராமநாதபுரம் மாவட்டம்.

துணைத் தலைவர் : மு.கிருஷ்ணன், 2/254. உப்பூர் கிராமம், உப்பூர் அஞ்சல், ஆர்.எஸ்.மங்கலம் தாலுக்கா, இராமநாதபுரம் மாவட்டம்,

அமைப்பாளர் : **ரா.அய்யனார்** கருங்குளம், பாக்குவெட்டி அஞ்சல், கமுதி தாலுக்கா, இராமநாதபுரம்.

துணை அமைப்பாளர்கள் : நா.மலைராஜ் பாண்டுக்குடி அஞ்சல், திருவாடனை தாலுக்கா, இராமநாதபுரம், செ. காளிஸ்வரன் குருவான்பச்சேரி, இருதயபுரம் அஞ்சல், ஆர். எஸ்.மங்கலம் தாலுக்கா, இராமநாதபுரம். மீ.காளிதாஸ், கூனங்குளம், பிடார்சேரி அஞ்சல், பரமக்குடி(தா), பாத்திபனூர், இராமநாதபுரம். ஆ.வெள்ளி, பனையேந்தல், இதம்பாடல் அஞ்சல், இராமநாதபுரம். சி.துரை, 1/2754 சேட் இப்ராகிம் நகர், இராமநாதபுரம். நா.ராஜேந்திரன், கர்க்கடாகுடி அஞ்சல், திருவாடனை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். திருமூர்த்தி, 61/4, கீழத்தூவல், முதுகுலத்தூர் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் 623 706. கி.சேர்வாரன், 16, மறவன் தெரு, முதுகுலத்தூர் - 623 704. இராமநாதபுரம் மாவட்டம்.

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்**

தலைவர் : வீ.இருளப்பன், 2/8/20ஏ, வெங்கிட்டாபட்டி தெரு, வத்தலக்குண்டு.

துணைத் தலைவர் : கு. ராஜேந்திரன், பெத்த நாயக்கன் புதூர், சித்திரைக்குளம், பழனி வட்டம்.

அமைப்பாளர் : **இல. கண்ணன்,** 3/397, செல்வி நகர், சீலப்பாடி, திண்டுக்கல் - 624005

துணை அமைப்பாளர்கள் : மா. வடிவேல், அண்ணாநகர், பண்ணைக்காடு, கொடைக்கானல் வட்டம். ப.மகேந்திரன், கிழக்கு தோட்டம், கோம்பைபட்டி, கணக்கன்பட்டி, பழனி வட்டம். கி. கோவிந்தராஜன், 5/102பி, கடைவீதி, ஆத்தூர். எஸ். கந்தசாமி, திருமணம்பட்டி, தெப்பக்குளத்துப்பட்டி அஞ்சல், திண்டுக்கல் - 624709 பெ. இராமமூர்த்தி, 17/3, வடக்கு தெரு, க. தருமத்துப்பட்டி, கன்னிவாடி வழி.

**திண்டுக்கல் மேற்கு மாவட்டம்**

தலைவர் : கு.சின்னச்சாமி, மேல்கரைப்பட்டி அஞ்சல் மேல்கரைப்பட்டி பழனி வட்டம்.

துணைத் தலைவர் : செ.கு.பொன்னுச்சாமி, அம்பிளிக்கை, ஒட்டன்சத்திரம் வட்டம்.

அமைப்பாளர் : **க.மருதபிள்ளை,** காளணம்பட்டி, நத்தப்பட்டி அஞ்சல், வேடசந்தூர் வட்டம்.

துணை அமைப்பாளர்கள் : கா.தங்கதுரை, பழனிக்கவுண்டன்புதூர் ஒட்டன்சத்திரம் நகரம், ஒட்டன்சத்திரம் வட்டம். ப.சிவசாமி, சாலரப்பட்டி, விருதலைப்பட்டி வேடசந்தூர் வட்டம். எஸ்.பி.முருகன், ஆத்துப்பட்டி, ஸ்ரீராமபுரம், வேடசந்தூர் வட்டம். ச.ஜோசப் ராயப்பன், தவசிமடை, சாணார்பட்டி திண்டுக்கல் வட்டம். ரா.சேட் (எ) குப்புச்சாமி, சின்னையகவுண்டன் வலசு மண்டவாடி, ஒட்டன்சத்திரம் வட்டம். ந.வீரமணி, மெயின்ரோடு, அம்பிளிக்கை ஒட்டன்சத்திரம் வட்டம். இரா. பொன்னரசு, வடக்கு தெரு, பெரிய கோட்டை, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

**தேனி தெற்கு மாவட்டம்**

தலைவர் : எஸ்.ஜெயபால், வாலிப்பாறை, தும்மக்குண்டு அஞ்சல், ஆண்டிபட்டி தாலுகா. தேனி மாவட்டம்.

துணைத் தலைவர் : கே.சிங்கம், 95/82, சுவாமி விவேகானந்தர் தெரு, உத்தமபுரம், கம்பம், உத்தமபாளையம் தாலுகா. தேனி மாவட்டம் - 625 516.

அமைப்பாளர் : **ஜி.மணி,** 184, பகவதியம்மன் கோயில் தெரு, எரசக்கநாயக்கனூர். உத்தமபாளையம் தாலுகா. தேனி மாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள்: எம்.ஜெயச்சந்திரன், தர்மராஜபுரம், வருசநாடு (அஞ்சல்) ஆண்டிபட்டி தாலுகா. தேனி மாவட்டம். எம்.வீரமுருகேசன் 683, டபுள்யு/4, மெயின் ரோடு, காமயகவுண்டன்பட்டி (அஞ்சல்), உத்தமபாளையம் தாலுகா. தேனி மாவட்டம் - 625 521. பி.அருண்மணி, டபுள்யு /2, பட்டாளம்மன் கோவில் தெரு, கூடலூர், உத்தமபாளையம் தாலுகா. தேனி மாவட்டம் -625 518. என்.ஆர்.எஸ்.சேவியர் ஜோசப் செல்லத்துரை, 125/ டபுள்யு -4, இராயப்பர் தெரு, இராயப்பன்பட்டி (அஞ்சல்), உத்தமபாளையம் தாலுகா. தேனி மாவட்டம். பி.கல்யாணி, கிழக்குத்தெரு, அரப்படித்தேவன்பட்டி, குன்னூர் (அஞ்சல்), ஆண்டிபட்டி தாலுகா. தேனி மாவட்டம். ரொக்கம், முத்தனம்பட்டி, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்.

**தேனி வடக்கு மாவட்டம்**

தலைவர் : பொ.நடராஜன், எண்.108/448, சுப்பன் தெரு, வார்டு-30, தேனி மாவட்டம்

துணைத் தலைவர் : ந.செல்வம், பெரியபஜார் தெரு, வாழையாத்துபட்டி, பூதிப்புரம் அஞ்சல், போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்.

அமைப்பாளர் : **கி.சுரேஷ்குமார்,** எண்.54, டீ.பி. மேற்குத்தெரு, பங்களாமேடு, தேனி மாவட்டம்- 625531

துணை அமைப்பாளர்கள் : செ.ஓச்சாத்தேவர், தண்ணீர் தொட்டி தெரு, அட்ணன்பட்டி, தேவதாளப்பட்டி, பெரியகுளம் தாலுக்கா, தேனி மாவட்டம். எம்.கே.முருகேசன், வடக்குத் தெரு, தர்மாபுரி, காமாட்சிபுரம் வழி, தேனி மாவட்டம். நா. நாகராஜன், எண்.28/5, கிழக்கு தெரு, கருத்துப்பட்டி அஞ்சல், பெரியருளம், தேனி மாவட்டம். கே.பெருமாள், வையமுத்து நாயக்கர் தெரு, T.கள்ளிப்பட்டி, பெரியகுளம், தேனி மாவட்டம். சொ.திருநாவுக்கரசு, நடுத்தெரு, வயல்பட்டி, வீரபாண்டி அஞ்சல், தேனி மாவட்டம். மு.பாண்டியன், 15/123, பெந்தகோள் தெரு, வடக்கரை, கல்லார் ரோடு, பெரியகுளம், தேனி மாவட்டம்.

**மதுரை மாநகர் மாவட்டம்.**

தலைவர் : சி.கே.முருகேசன், 36.லெனின்தெரு, பூந்தமல்லிநகர், செல்லூர், மதுரை-2.

துணைத் தலைவர் : பி.வி.எஸ்.சேகர், 10.காஜாதெரு அமிர்தம் தியேட்டர் அருகில், மதுரை-1.

அமைப்பாளர் : **பி.சுப்பிரமணியன்,** 7எ/1,கார்ப்பரேசன் காலனி, சி.எம்.ஆர்.ரோடு, பாலரெங்காபுரம், மதுரை-9.

துணை அமைப்பாளர்கள் : க. மருது பாண்டியன், 166, வைகை காலனி அண்ணாநகர், மதுரை-20. டி.சக்திவேல், 20, ஸ்ரீராம் நகர், சம்மட்டிபுரம், மதுரை 16 இரா.குணசேகரன், 321.வி.பி.சிந்தன் தெரு, மேட்டுத்தெரு, பெத்தானியாபுரம், மதுரை-16. எம்.ஆதிசிவன் 15/233.வடக்குத் தெரு சத்தியமூர்த்தி நகர் பரவை எம்.கருப்பு, 59/22,அகீம்சாபுரம் 5வதுதெரு, செல்லூர், மதுரை-2. ஜி.நாகராஜ், 216.பத்மா இல்லம் இந்திராதெரு, பெத்தானியாபுரம், மதுரை-16.

**மதுரை வடக்கு மாவட்டம்**

தலைவர் : சே.இரவீந்திரன், 1-180, பொன்விழா நகர், முதல் கிழக்குத் தெரு, சூரியா நகர்.

துணைத்தலைவர்: உ. சுபேந்திரன், 1-71, சுந்தர்ராஜன்பட்டி, அரும்பனூர் அஞ்சல், மதுரை.

அமைப்பாளர் : **கு.முருகன்,** 1-74, வடக்குதெரு, மன்னாடிமங்கலம் அஞ்சல், மதுரை

துணை அமைப்பாளர்கள் : பி.ராஜேஸ்கண்ணன், 2-86-பி,பாலமுருகன்கோவில் தெரு, மேலப்பனங்காடி, வாகைக்குளம் அஞ்சல், மதுரை. எஸ்.வி.பாஸ்கரன், 6-66, மேலநாச்சிகுளம், வாடிப்பட்டி (தா), மதுரை சி.கருணாநிதி, 4-131, வடக்குதெரு, கருப்பாயூரணி, மதுரை. அ.மணிவேலு, அய்யப்பநாயக்கன்பட்டி, குருவித்துறை (அ), மதுரை. கே. பி.நியாயபதி, 88-உசிலம்பட்டி, கருவனூர் (அ), மதுரை, வே.சுரேஷ்குமார். 5-90, காளியம்மன்கோவில்தெரு, வண்டியூர், மதுரை, இராஜேந்திரன், 2/63, அரும்பனூர் புதூர், கொடிகுலம் அஞ்சல், மதுரை பா.மணிமாறன், 6-268, காளியம்மன்கோவில் தெரு, கருப்பாயூரணி, மதுரை.

**தென்காசி வடக்கு மாவட்டம்**

தலைவர் : க.பாலசுப்ரமணியன், 8/140, செக்கடி தெரு, குருவிகுளம்,

துணைத் தலைவர் : அ.வெள்ளைச்சாமி, 6/249, பிள்ளையார்கோவில் தெரு, கே.எம்.அச்சம்பட்டி, அரியநாயகிபுரம் அஞ்சல், கடையநல்லூர் தாலுகா, தென்காசி.

அமைப்பாளர் : **கோ.மாடசாமி,** 2/364, பள்ளிகூடத்தெரு, திருமலாபுரம், ராமநாதபுரம் அஞ்சல், சிவகிரி,

துணை அமைப்பாளர்கள் : மா.முத்துப்பாண்டியன், 259, தெற்குதெரு, சில்லிகுளம், பெரிகோவிலங்குளம் அஞ்சல், சங்கரன்கோவில். க.சரவணபெருமாள், 1/99, பஜனைகோவில் தெரு, சென்னிகுளம், சங்கரன்கோவில். கோ.ரீகுமார், 5/252, நாராயணபுரம் தெரு, கீழநீலிதநல்லூர், சங்கரன்கோவில். வி.கே.ஜி.வீரமணி, 36, சாந்திவிநாயகர்கோவில் தெரு, சிவகிரி, தி.அன்புக்கரசு, 7/53எ, மேலத்தெரு, வடமலாபுரம். கே.கருப்பசாமி, 310/1, முல்லை நகர், ரயில்வே ஃபிடர்ஸ்ரோடு, சங்கரன்கோயில், ம.சங்கரபாண்டியன், கிருஷ்ணன் கோயில் தெரு, செந்தட்டி தெற்கு சங்கரன்கோவில் பஞ்சாயத்து, தென்காசி மாவட்டம். சு.திருமலைக்குமார், 2/202, தெற்குத்தெரு, சின்னகோவிலான்குளம், சங்கரன்கோவில் வழி, தென்காசி மாவட்டம். - 627 953.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் : சி.போத்திக்கண்ணு, 1/49, கீழத்தெரு, வெங்கல பொட்டல் நாஞ்சான்குளம் போஸ்ட், மானூர்.

துணைத் தலைவர் : பெ. துரை, 1/145, அம்மன் கோவில் தெரு கருப்பந்துறை, குன்னத்தூர் திருநெல்வேலி.

அமைப்பாளர் : **எஸ்.வி.பொன்னையா பாண்டியன்,** சி77,16வதுகுறுக்குதெரு, மகாராஜாநகர்பாளையங்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் : கே.கொம்பையா, 2/279, அம்மன் கோவில் தெரு, தெற்குபட்டி, மானூர்-627201. சே.முத்துமாரி, 11, மறவர் நாடார் காலனி, திருப்பணிகரிசல்குளம், திருநெல்வேலி. இ.ஐயப்பன், 4/25, மேட்டுத்தெரு, சிறுக்கன் குறிச்சி, சீதபற்பநல்லூர். பே. சுடலைமுத்து, 109, நடுத்தெரு, வெள்ளாளங்குளம். கி. குட்டித்துரை, 8/128, தெற்கு புதுக்குடி, கல்லூர் திருநெல்வேலி.

**திருநெல்வேலி மாநகரம்**

தலைவர் : எஸ்.எஸ்.முத்து, 1/67, லஜபதி நகர், மலையாள மேடு பழையபேட்டை, திருநெல்வேலி.

துணைத் தலைவர் : ப.கனகராஜ், 1/145, அம்மன் கோவில் தெரு, கருப்பந்துறை, குன்னத்தூர், திருநெல்வேலி.

அமைப்பாளர் : **நெல்லை மா.முருகன்,** 610, மகிழ்ச்சி நகர், வாட்டர் டேங்க், என்.ஜி.ஓ. காலனி, பாளையங்கோட்டை.

துணைத் தலைவர்கள் : பி.ஆர்.பழனிச்சாமி, 28/டி/5, செந்தில் நகர் பாளையங்கோட்டை. த.கோபி, நடுத்தெரு, மேலக்கரை திருநெல்வேலி. எ.காந்தி, 5, கிழக்குத்தெரு ராம் முத்துராம் தியேட்டர் பின்புறம், பாலபாக்கியா நகர் திருநெல்வேலி. செ.கருப்பசாமி (எ) குண்டு பாண்டியன், 15/114, கைலாசபுரம் தெற்கு தெரு, துவரை, நெல்லை சந்திப்பு. இசக்கிமுத்து, 101,செண்பகம்பிள்ளை இரட்டைத் தெரு திருநெல்வேலி டவுண், திருநெல்வேலி.

**திருப்பூர் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் : ப.சிவகுமார், 3/115, கல்ரான்தோட்டம், வடுகபாளையம் புதூர், பல்லடம் தாலுகா, திருப்பூர் மாவட்டம் - 641 664.

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் : ஜே.சேவியர் மணி, 21, பூங்கா வீதி, வடிவீஸ்வரம், நாகர்கோவில் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம்.

**திருப்பத்தூர் மாவட்டம்**

துணை அமைப்பாளர் : ஜி.பாப்பண்ணன் (எ) கே.ஜி.பாபு, காந்திநகர், ஜோன்ராம்பள்ளி, கொடுமாம்பள்ளி அஞ்சல் 635 653, திருப்பத்தூர் மாவட்டம்,

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 31-07-2023

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

---

### அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நாளை அமைதிப் பேரணி!

# கோவை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

## நா.கார்த்திக் - தொ.அ.ரவி - தளபதி முருகேசன் அறிவிப்பு!

கோவை, ஆக. 6-

இந்திய அரசியல் அரங்கின் ஒப்பற்ற ஆளுமையான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆவது நினைவு நாளை முன்னிட்டு ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (07.08.2023 திங்கள் கிழமை) காலை 9.00 மணியளவில் நேரு விளையாட்டு அரங்கம் நுழைவு வாயிலில் இருந்து டாக்டர் நஞ்சப்பா சாலை வழியாக காந்திபுரம் அண்ணா சிலை வரை தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் அமைதிப் பேரணி மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்துப் புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோரின் அறிவிப்பு வருமாறு:-

இந்தியத் திருநாட்டின் முதுபெரும் தலைவர், தமிழ் நாட்டு மக்களுக்காக இரவு பகல் பாராமல், ஓயாமல் உழைத்த மகத்தான தலைவர், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த தலைவர், தனக்கு முன்பும், பின்பும் யாரும் எட்ட முடியாத பல சாதனைகளைச் செய்து அமைதியாக இன்று ஓய்வெடுத்துக் கொண்டிருப்பவர். இந்தியத் திருநாட்டில் தனித்துவம் மிக்க மாநிலமாக தமிழ்நாட்டை வடிவமைத்த சிற்பிகளுள் ஒருவர்,வரலாற்று நாயகன், செம்மொழிக் காவலர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆவார்.

16 வயதில் பத்திரிகையாளர், 20 வயதில் வெற்றிகரமான வசனகர்த்தா, 32 வயதில் தேர்தலில் வென்று சட்டசபைக்குள் சென்றவர், தேர்தலில் 13 முறைகள் தொடர்ச்சியாக வென்று 95 வயதிலும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். 38 வயதில் திமுக பொருளாளர், 49 ஆண்டுகளாக தி.மு.க. தலைவர், ஐந்து முறை தமிழக முதலமைச்சர் எனத் தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகள் எண்ணிலடங்கா...

பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தது, அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அளித்தது, விதவைகளுக்கு மறுமண உதவித் திட்டங்களை அளித்தது ஆகியன பெண்ணுரிமைக்கான, சமூகப் புரட்சிக்கான அடையாளங்களாகும். சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றியதில் அவரின் சாதனை அளப்பரியது. கை ரிக்ஷா ஒழிப்புத்திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத்திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் அரசு மருத்துவமனைகள், கலை அறிவியல் கல்லூரிகள், பல்வேறு பல்கலைக்கழகங்கள், வருமுன் காப்போம், உழவர் சந்தைகள், குடிசை மாற்று வாரியம் மற்றும் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைத்தது எனப் பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியவர்.

இடஒதுக்கீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தி, அனைத்துச் சமூகத்திலும் அடித்தட்டு மக்கள் அனைவரும் கல்வி, வேலை வாய்ப்புகளை உறுதி செய்தவர். நீர்ப்பாசனம், மின்சாரம், வேளாண்மை, தொழிலாளர் நலன், நிலச்சீர்திருத்தம் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியது, தொழில் துறை முதலீடுகளை ஈர்த்தது என்று தமிழகத்தைத் தொழில் துறையில் தலை நிமிர வைத்தவர்.

தமிழக அரசியல் வரலாற்றில் தனது பேராற்றலாலும், பெரும் பணிகளாலும், அயராத உழைப்பினாலும், ஆற்றல்மிக்கப் படைப்புகளாலும் தனி முத்திரைப் பதித்த முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் 5ஆவது நினைவு நாளை முன்னிட்டு,

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில், 07.08.2023 திங்கள் கிழமை காலை 9.00 மணியளவில், நேரு விளையாட்டு அரங்கம் நுழைவு வாயிலில் இருந்து டாக்டர் நஞ்சப்பா சாலை வழியாக, காந்திபுரம் அண்ணா சிலை வரை,

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.

தொடர்ந்து, தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்துப் புகழ் அஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

அது சமயம், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், பொதுக்குழு உறுப்பினர்கள், நகரக்கழக, பகுதிக்கழக, ஒன்றியக்கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக்கழகச் செயலாளர்கள், நகரக்கழக, பகுதிக் கழக, ஒன்றியக்கழக, பேரூர்க்கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், செயல்வீரர்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

---

### ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் - வழக்கறிஞர் திண்டிவனம் கே.அசோகன் தலைமையில்

# திண்டிவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நல உதவிகள் வழங்கல்!

## வழக்கறிஞர்கள் செல்வம் - வேலாயுதம் - மோகனசுந்தரம் - கேபிள் மோகன் முன்னிலை!

திண்டிவனம், ஆக. 6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளையும் புகழையும் இளைய தலைமுறையினருக்கும், பொதுமக்களுக்கும் பயன்படுகின்ற வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடிட வேண்டும் என்று கழகத் தொண்டர்களுக்கும், கழக முன்னோடிகளுக்கும், ஆணையிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்க 04.08.2023ந் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரில், திண்டிவனம் பிரதான நேரு வீதியில் ஆர். எஸ்.பிள்ளை வீதி கூட்டு ரோட்டில் இருந்து முன்னாள் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டக் கழக முன்னாள் துணை செயலாளர் வழக்கறிஞர் திண்டிவனம்கே.அசோகன் தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக வழக்கறிஞர்கள் மற்றும் கூட்டணி கட்சி வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கி கோஷம் எழுப்பி வந்து திண்டிவனம்

கிளைச்சிறையில் உள்ளவர்கள் பண்படும் வகையிலும், பயன்படும் வகையிலும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், அண்ணல் அம்பேத்கர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க 100 புத்தகங்கள் கிளைச்சிறை பொறுப்பு சிறை கண்காணிப்பாளர் செல்வராஜிடம் வழங்கப் பட்டது.

மேலும் கிளைச் சிறையில் உள்ள அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் இனிப்பு வழங்கி, சிறையில் உள்ள கைதிகளுக்கும் இனிப்பு, காரம், பிஸ்கட் வழங்கியும் கொண்டாடினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு மூத்த வழக்கறிஞர்கள் டி.செல்வம், பி.செந்தாமரைக்கண்ணன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் பி.வேலாயுதம், டி.மோகனசுந்தரம், நகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆர்.சக்திவேல், நகராட்சி வழக்கறிஞர் கேபிள் மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.


இந்நிகழ்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழக வழக்கறிஞர்கள் சந்திரன், ராஜ்குமார், இளவரசு, செல்வநாயகம், சந்திரகுமார், நந்தகுமார், ஞானமூர்த்தி, கபீர், பரமேஸ்வரன், உமா சந்திர பிரகாஷ், பொன்குமார், அமர்நாத், விஜயகுமார், மாதவன், ராஜா வேலாயுதம், இமயவரம்பன், கலாநிதி, பிரபாகரன், அப்துல்லா மற்றும் கூட்டணி கட்சி வழக்கறிஞர்கள் காங்கிரஸ் பொன்ராஜா மற்றும் ம.தி.மு.க. வழக்கறிஞர் நாகையா விடுதலைச் சிறுத்தை வழக்கறிஞர்கள் ராமு, முருகன் என்கிற தமிழ்வாணன் மற்றும் தி.மு.க. நகர கழக துணை செயலாளர் தாஜுதீன், மாவட்ட இலக்கிய அணி தலைவர் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் சுகுமார், நகர சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சாதிக் பாஷா, நகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் கிளாசிக் ரமேஷ், மயிலம் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ரவி இளங்கோவன், கிளைக் கழக செயலாளர் சுந்தரமூர்த்தி, கிளைக் கழகப் பிரதிநிதி பிரஸ் பழனி, இறையானூர் ராஜேஷ், சலவாதி சண்முகம், மீனவர் அணி சரவணன், முட்டியூர் ராமலிங்கம், கேணிப்பட்டு ஜெய்சங்கர் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

சிறை காவலர்கள் தெய்வக் கண்ணன், தமிழரசன், ராஜதுரை ஆகியோர் பாதுகாப்பு பணியை மேற்கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ஏ.வி. பதி
### ஆகஸ்ட் 6 (1996)



தஞ்சை மாவட்டக் கழக முன்னணித் தோழர்களில் ஒருவர். தஞ்சை நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் தொடங்கிய நாள் முதல் தன்னை முழுமையாக கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் தஞ்சை வட்டத் தலைவராக பொதுப்பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – மன்னை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**